**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW8** |
| **Name** | **:** | **கோவிந்தராஜ்** |
| **Father's Name** | **:** | **த/பெ சண்முகம்** |
| **Age** | **:** | **29** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் சிவாடி, காட்டுவளவு ஊத்துப்பள்ளம் கிராமத்தில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான TN29-BL-4776 என்ற Yamaha இருசக்கர வாகனத்தை எனது உறவினர் வெற்றி என்பவர் 19.06.2025 ஆம் தேதியன்று வேலைக்கு செல்வதற்காக எடுத்து சென்றார். அதன்பின்பு, அவர்மீது லாரி மோதி விபத்து நடைபெற்றதாக கேள்விப்பட்டேன். இருசக்கர வாகனத்தில் வெற்றி, கார்த்திக் ஆகிய இருவரும் சென்றார்கள். விபத்தில் அடிப்பட்டு இருவரும் இறந்து விட்டார்கள். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

இருசக்கர வாகனத்தை ஓட்டிய கார்த்திக் மற்றும் வெற்றி ஆகியோருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது.

**மறுவிசாரணை** : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.04 16:54:36 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 569/2025** |
| **Ranking of witness** | **:** | **PW9** |
| **Name** | **:** | **உலகநாதன்** |
| **Father's Name** | **:** | **த/பெ பெருமாள்** |
| **Age** | **:** | **58** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 19.06.2025ஆம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது காலை 11.15 மணியளவில் சாட்சி ஐயம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று, அதன்பேரில் நிலைய கு.எண். 187/2025 சட்ட பிரிவுகள் 281, 106(1) BNS என்ற பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு முதல் தகவல் அறிக்கையின் நகலை அதியமான்கோட்டை காவல் ஆய்வாளராக பொறுப்பு பணியில் இருந்த மதிகோன்பாளையம் ஆய்வாளரின் விசாரணைக்காக அவரிடம் சமர்ப்பித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்து, எவ்வளவு நேரத்தில் புகார் கிடைக்கப்பெற்றது என்றால் 10 நிமிடத்தில் கிடைக்கப்பெற்றது என்றால் சரி. இந்த புகாரை நிலையத்தில் நேரில் ஆஜராகி புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் சரி. புகாரை வாங்கிய பிறகு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பு, புகாரில் குறிப்பிட்ட சம்பவங்களை, சம்பவ இடம் சென்று பார்வையிட்டு, உறுதி செய்தேன் என்றால் சரி. ஆமாம், நேரில் பார்வையிட்டு உறுதி செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்பாக சம்பவ இடம் பார்வையிட்டேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது இன்ஸ்பெக்டர் காவல் நிலையத்தில் இருந்தார். வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். 19.06.2025ல் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு 02.07.2025 அன்றுதான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த இடைப்பட்ட நாட்களில் முதல் தகவல் அறிக்கை யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால், காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் பொறுப்பில் இருந்தது.

**<u>மறுவிசாரணை</u>** :   இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.04 16:54:44 +0530

**சாட்சியின் கையொப்பம்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**